**பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூம் -2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை

கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையை பெற்றுக்கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்தின் உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். இந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பந்தி 47 படி சொத்துக்கள் மூன்று வருடங்களுக்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் பதவிநிலைக் கல்லூரியின் ரூபா 1,352.15 மில்லியன் தொகை பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட வருடமான 2008 ஆண்டு முதல் மீளாய்வு ஆண்டு இறுதி வரையும் மீள் மதிப்பீடு செய்து தற்போதைய பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. அதேபோல் முழுமையாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற இராணுவத்தினால் கல்லூரிக்கு வழங்கியிருந்த ரூபா 17,450,000 தொகை பெறுமதியான வாகனங்களின் ஆக்கபூர்வமான ஆயுட்காலம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இற்கு இணங்க மீள்மதிப்பீடு செய்து கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணிகள் கட்டிடங்கள் எதிர்காலத்தில் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மற்றும் இராணுவத்தினால் கல்லூரிக்கு வழங்கியிருந்த ரூபா 17,450,000 தொகை பெறுமதியான வாகனங்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | குறிப்பிட்ட காலம் முடிவடைந்த பின்னர் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களில் அறுதியாக காட்டப்பட்டிருந்த வழிகாட்டல்கள் மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து புதிய பெறுமதியை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது வதிவில்லாத வெளிநாட்டு நாணயக் கணக்கின் (NRFC) மூலம் கொள்வனவு செய்திருந்த ரூபா 2,862,176 தொகை பெறுமதியான உபகரணங்கள் உரிய ரூபா 572,435 இற்கான பிற்போடப்பட்ட வருமானத்திற்கு உட்படுத்தக் கூடாது எனினும், அந்தப் பெறுமதியினையும் உட்படுத்தி பிற்போடப்பட்ட வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, கல்லூரியின் மிகை அந்தத் தொகையினால் மிகையாக சித்தரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2022 ஏப்ரல் மாதம் நாட்குறிப்புப் பதிவின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பிற்போடப்பட்ட வருமானங்களை சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 மற்றும் 2021 ஆண்டுகளுக்காக செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக ரூபா 828,000 இற்கான மொத்த ஒதுக்கீடு ஒன்று மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், அதற்காக நிதிக் கூற்றுக்களில் ஒதுக்கீடு செய்திருக்கவில்லை. | கணக்காய்வுக் கட்டணத்திற்குரிய இன்வொயிஸ் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்கீடு செய்யப்படவில்லை எனவும், எதிர் காலத்தில் மதிப்பீட்டுத் தொகை ஒன்று கணக்குகளில் ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது செலுத்த வேண்டிய செலவுகளுக்காக ஒதுக்கீடு ஒன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1980 இன் 46 இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டம் | ஊழியர்களின் நியமனத்தில் காணப்பட்ட சிக்கல் நிலைமைகளை சரி செய்த பின்னர் பாதுகாப்பு அமைச்சினால் வேலை வாய்ப்பு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் அங்கத்துவம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி தொழில் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தொழில் அமைச்சின் பரிந்துரை கிடைத்தவுடன் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் பதிவு செய்து பங்களிப்புத் தொகை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிப் பிரமாணம் 396(ஈ) | காசோலைகளை சமர்ப்பித்து கால நீடிப்பு பெற்றுக்கொள்ள வேண்டும் என குறிப்பிட்ட தரப்பினருக்கு அறிவித்திருந்த போதிலும், பதில் கிடைக்காமையால் காசோலைகளை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | காசோலைகளை சமர்ப்பித்து கால நீடிப்பு பெற்றுக்கொள்வதற்கு வேண்டும் என குறிப்பிட்ட தரப்பினருக்கு அறிவித்திருப்பதுடன், பதில் கிடைக்கப்படாமையால் காசோலைகளை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 28,959,511 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 27,963,274 தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 996,237 இற்கான வளர்ச்சி ஒன்று ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 15,867,111 தொகையினால் அதிகரித்தலுக்கு ஒப்பாக வெளிநாட்டு மாணவர்களிடமிருந்த கிடைத்திருந்த வருமானம் ரூபா 16,882,235 இனால் அதிகரித்தல் இந்த வளர்ச்சிக்கு பிரதானமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 133 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த நான்கு மாடி நூலகம் மற்றும் பரீட்சை மண்டபக் கட்டிடத்தின் நீர் ஒழுகும் சிக்கல் காரணமாக மேல் மாடியில் மின்சார முறைமை மற்றும் சுவர்களுக்கு பாரிய சேதங்கள் ஏற்பட்டு காணப்பட்டதுடன், புனர்நிர்மாண வேலைகள் மேற்கொள்வதற்கு 2019 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை முடியாதிருந்தது. | ஒப்பந்த வேலை சேவைகள் தொடர்பாக ICTAD/SBD/02 இன் Clause 11.4 (அ) உப பிரிவிற்கு இணங்க கட்டிடத்தின் சேதங்கள் கல்லூரியினால் அல்லது கொடுப்பனவு செய்யும் தரப்பினரினால் மேற்கொண்டு அதற்காக செலவிடப்படும் தொகை ஒப்பந்தவேலை கம்பனியில் இருந்து அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கும்படி பாதுகாப்பு அமைச்சிலிருந்து அறிவுரை கிடைக்கப்பெற்றுள்ளது. | கட்டிடத்தின் திருத்த வேலைகள் விரைவாக மேற்கொள்வதற்கு வினைத்திறனுள்ள மற்றும் முறையான வேலைத் திட்டமொன்று செயற்படுத்த வேண்டும். |

## 3.2 வாகன முறைமைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குத்தகை அடிப்படையில் வாகனங்கள் பெற்றுக்கொள்ளும் போது ஒரே கோவையின் மூலம் 2021 பெப்ரவரி முதல் 2021 திசெம்பர் வரை 10 மாத காலப் பகுதியில் நான்கு சந்தர்ப்பங்களில் கூறுவிலைகள் அழைக்கப்பட்டு 04 வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அதேபோல் குத்தகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக்கொள்ளும் போது விழைகூறல் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள முறைகளுக்கு முரணாக வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மேலும், இவ்வாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஐந்து வாகனங்களும் பரிசோதனை செய்த போது மூன்று வாகனங்களின் ஓடப்பட வேண்டிய குறைந்த கிலோ மீற்றர் எண்ணிக்கை மிகவும் குறைந்த தொகையொன்று ஓடியிருந்ததுடன், ஏனைய இரண்டு வாகனங்கள் குறைந்த கிலோ மீற்றர் எண்ணிக்கையை மிகைத்து ஓட்டப்பட்டிருந்தது. அதன்படி, வானங்களை பயன்படுத்துவதில் சிக்ககனத் தன்மையின்றி ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | வாகனங்களை குத்தகை கொடுப்பனவு அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் போது குறிப்பிட்ட அங்கீகாரத்துடன், ஓட்டப்பட வேண்டிய கிலோ மீற்றர் எண்ணிக்கை தொடர்பாக உடன்படிக்கை மேற்கொள்ளப்படாததுடன், கல்லூரியின் தேவைப்பாட்டின் அடிப்படையாக கொண்டு வாகனங்கள் குத்தகைக்கு எடுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. அதன்படி, ஓடப்படுகின்ற கிலோ மீற்றர் எண்ணிக்கைகள் வித்தியாசப்படலாம். | சொத்துக்கள் சிக்கனத்துடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |